**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**திருச்சிராப்பள்ளி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண்**

**அறிக்கை**

**(30.11.2024 முதல் 04.12.2024)**

**அறிக்கை எண் 70/2024** **தேதி. 29.11.2024**

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் 26.11.24 முதல் 28.11.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 25 - 29 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 22 - 24 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 96 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 96 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 – 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வட மேற்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருச்சிராப்பள்ளி (30.11.2024 முதல் 04.12.2024)**

| கடந்த வார வானிலை (26.11.2024 முதல் 28.11.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 04.12.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 26/11 | நாள்-2 27/11 | நாள்-3 28/11 | தேதி | நாள்-1 30/11 | நாள்-2 01/12 | நாள்-3 02/12 | நாள்-4 03/12 | நாள்-5 04/12 |
| 0.0 | 15.3 | 3.1 | மழை (மி.மீ) | 52 | 63 | 21 | 16 | 10 |
| 29 | 28 | 25 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 27 | 26 | 25 | 25 |
| 24 | 22 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 22 | 21 | 20 | 20 |
| 8 | 8 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 6 |
| 91 | 96 | 95 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 96 | 86 | 71 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 80 | 80 | 70 | 70 | 60 |
| 8 | 10 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 36 | 60 | 6 | 8 | 10 |
| வட வட கிழக்கு | வட மேற்கு | வட மேற்கு | காற்றுவீசும் திசை | மேற்கு | மேற்கு தென் மேற்கு | தெற்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு |

**திருச்சிராப்பள்ளி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 30.11.2024 முதல் 04.12.2024 ஆகிய தினங்களுக்கு மிதமானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 25 - 28 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 20 - 23 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 6 – 60 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் கிழக்கு தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் லேசானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| | | வடிகால் வாய்க்கால்களை தூர்வாரவும். |
| | | வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும். |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதைத் தவிர்க்கவும் |
| | | பன்னை கருவிகள், இயந்திரங்கள், மின் கலங்கள் போன்றவற்றை தண்ணீர் தேங்காத இடங்களில் பாதுகாப்பாக வைக்கவும். |
| அனைத்துப் பயிர்கள் | தண்ணீர் பாய்ச்சுதல் | வரும் நாட்களில் லேசானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| பழ மரங்கள் | | பழ மரங்களில் காற்று புகும் வகையில் கிளைகளை வெட்டி விடவேண்டும். |
| கரும்பு | | காற்று மற்றும் மழையால் கரும்பு பயிர் சாயாமல் இருக்க விட்டம் கட்டி மண் அணைக்கவும் |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | கால்நடைகளை உயர்ந்த பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்யவும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் லேசானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்

**இயக்குநர்**